Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஜூலை 13, 2024 | இதழ் 91

# விக்கிரவாண்டியில் தி.மு.க. அமோக வெற்றி ஸ்டாலினுக்கு அமைச்சர்கள் வாழ்த்து

## அன்னியூர் சிவா (தி.மு.க.) - 1,23,689 பா.ம.க. 56,243 நாம் தமிழர் - 10,832









சென்னை, 13 ஜூலை 2024: விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 1 லட்சத்து 23 ஆயிரத்து 689 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இவர் பா.ம.க. வேட்பாளரை விட 67 ஆயிரத்து 446 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி 56 ஆயிரத்து 243 வாக்குகள் பெற்று 2வது இடத்தில் உள்ளார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா 10 ஆயிரத்து 832 வாக்குகள் பெற்று 3வது இடத்தில் உள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்கு தொடங்கியது. ஆரம்ப முதலே தி.மு.க. வேட்பாளர் தொடர்ந்து முன்னிலையில் இருந்தார்.

விக்கிரவாண்டி தொகுதியின் எம்எல்ஏ புகழேந்தி உடல்நலக்குறைவால் கடந்த ஏப்ரல் மாதம் காலமானார். இதனைத் தொடர்ந்து கடந்த 10ம் தேதி இத்தொகுதியின் இடைத்தேர்தல் நடைபெற்றது.

தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா உட்பட 29 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பிரதான எதிர்க்கட்சியான அண்ணா தி.மு.க. தேர்தலை புறக்கணித்தது.

இந்த தேர்தலில் 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். ஆனால் 1 லட்சத்து 95 ஆயிரத்து 495 வாக்காளர்கள் வாக்களித்தனர். இது 82.48 சதவீத வாக்குப்பதிவாகும்.

வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட 572 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 276 கட்டுப்பாட்டு யந்திரங்கள், 276 யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்யும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கொண்டு வரப்பட்டு, வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைக்கப்பட்டது. பாதுகாப்பு அறைக்கு மூன்றடுக்கு பாதுகாப்புடன், சுழற்சி முறையில் 24 மணி நேரமும் 150 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தன.

இந்த நிலையில் வாக்கு எண்ணும் பணி இன்று காலை துவங்கியது. வாக்கு எண்ணும் பணியில் 150 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். பாதுகாப்புப் பணியில் 1,200 போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

மாவட்டத் தேர்தல் அலுவலரும், கலெக்டருமான சி.பழனி, தேர்தல் நடத்தும் அலுவலர் மு.சந்திரசேகர் தலைமையில், அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், அவர்களின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறைக்கு வைக்கப்பட்ட சீல் அகற்றப்பட்டு அறை திறக்கப்பட்டது. தொடர்ந்து வாக்குப்பதிவு யந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை பகுதிக்கு கொண்டு வரப்பட்டன. முன்னதாக விக்கிரவாண்டி வட்டாட்சியரகத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த அஞ்சல் வாக்குகள் கொண்ட பெட்டி எடுக்கப்பட்டு, வாக்கு எண்ணிக்கை மையத்துக்கு கொண்டு வரப்பட்டன. இன்று காலை 8 மணிக்கு முதலில் தபால் வாக்குகளைக் கொண்ட பெட்டியின் சீல் உடைக்கப்பட்டு, வாக்குகள் பிரிக்கப்பட்டு, 50 எண்ணிக்கை கொண்டு கட்டுகளாக கட்டப்பட்டு அதன் பின்னர் எண்ணப்பட்டன. தபால் வாக்குகள் எண்ணுவதற்கு 2 மேஜைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இதில் முதல்வாக்கே கையெழுத்து இல்லாததால் செல்லாத வாக்காக அறிவிக்கப்பட்டது. தபால் வாக்குகள் எண்ணிக்கையின் முடிவில், தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 130 வாக்குகளுடன் முன்னிலை பெற்றார். பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணிக்கு 10 வாக்குகள் கிடைத்துள்ளன. நாம் தமிழர் வேட்பாளர் டாக்டர் அபிநயா 2 வாக்குகள் பெற்றார்.

மின்னணு வாக்கு எண்ணிக்கைக்காக 14 மேஜைகள் அமைக்கப்பட்டிருந்தன. 20 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. ஒவ்வொரு மேஜையிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நிகழ்வுகளை சி.சி.டி.வி. மூலம் கண்காணிக்கவும், வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேஜை ஒன்றுக்கு ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர், ஒரு நுண் பார்வையாளர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தபால் வாக்குகள் எண்ணி முடித்த பிறகு மின்னணு வாக்குப்பதிவு யந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணப்பட்டன. தபால் வாக்குகளில் முன்னிலை பெற்றது போலவே மின்னணு வாக்கு எண்ணிக்கையிலும் தி.மு.க. முன்னிலை பெற்றது. முதல் சுற்றிலிருந்தே தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா முன்னிலை பெற்று வருகிறார்.

இதனையடுத்து வாக்கு எண்ணிக்கை மையத்தைச் சுற்றியும், தொகுதியில் ஆங்காங்கேயும் தி.மு.க. தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு இடங்களில் பட்டாசுகளை வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி வருகிறார்கள்.

முதல் சுற்றில் அன்னியூர் சிவா (தி.மு.க.) 5,564 வாக்குகள், சி.அன்புமணி (பா.ம.க.) 2,894, அபிநயா (நா.த.க.) 303 வாக்குகள் பெற்றனர்.

2 வது சுற்றில் அன்னியூர் சிவா 12,002, சி.அன்புமணி 5904 அபிநயா 849 வாக்குகள் பெற்றனர்.

3 வது சுற்றில் அன்னியூர் சிவா 18,057 சி.அன்புமணி 7,323 அபிநயா 1,383 வாக்குகள் பெற்றனர்.

9 வது சுற்றின் முடிவில் தி.மு.க. 57,483 வாக்குகளும், பா.ம.க. 24,130 வாக்குகளும், நாம் தமிழர் 4704 வாக்குகளும் பெற்றனர்.

15 வது சுற்று முடிவில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 94,992 வாக்குகள் பெற்று முன்னிலையில் இருந்தார். பா.ம.க. வேட்பாளர் ராமதாஸ் 43,463 வாக்குகளும், நா.த.க. வேட்பாளர் அபிநயா 7,760 வாக்குகளும் பெற்றிருந்தனர். இந்த இடைத்தேர்தலில் பா.ம.க. டெபாசிட்டை தக்க வைத்துள்ளது.

இவ்வாறாக அனைத்து சுற்றிலும் தி.மு.க. வேட்பாளர் முன்னிலையில் இருந்து வந்தனர். 2வது இடத்தில் பா.ம.க.வும், 3வது இடத்தில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களும் இருந்தனர்.

வாக்கு எண்ணிக்கை முடிவில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா 1 லட்சத்து 23 ஆயிரத்து 689 வாக்குகளும், பா.ம.க. வேட்பாளர் 56 ஆயிரத்து 243 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் 10 ஆயிரத்து 832 வாக்குகளும் பெற்றிருந்தனர். பா.ம.க. வேட்பாளரை தவிர நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உட்பட 27 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

அண்ணா அறிவாலயத்திலும் தி.மு.க.வினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அண்ணா அறிவாலயம் வந்த தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அங்கு திரண்டிருந்த தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இடைத்தேர்தலில் தி.மு.க. தொடர்ந்து முன்னிலை பெற்று வருவதையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்தனர். அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், சாத்தூர் ராமசந்திரன் ஆகியோர் முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

போலி அடையாள அட்டையை வைத்து வாக்கு எண்ணும் மையத்துக்குள் நுழைய முயன்ற நபரால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த போலீசார் போலி அடையாள அட்டை வைத்திருந்த நபரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் மக்கள் குரல்
உள்ளது உள்ளபடி
சனிக்கிழமை,
ஜூலை 13, 2024

# பொய் வழக்கு போட்டு எம்.ஆர். விஜயபாஸ்கரை குற்றவாளி போல சித்தரிப்பதா?

## சர்வாதிகாரத்தின் உச்சத்தில் ஸ்டாலின்: எடப்பாடி எச்சரிக்கை



சென்னை, 13 ஜூலை 2024: சர்வாதிகாரத்தின் உச்சத்துக்கு சென்றிருக்கிறார் மு.க.ஸ்டாலின் என்று அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக தாக்கி உள்ளார். இது இனியும் தொடர்ந்தால் மிகப் பெரிய போராட்டம் நடத்தப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சரான மு.க. ஸ்டாலின் நாளும், பொழுதும் வேஷம் கட்டி மக்களை ஏமாற்றி வருவது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் நடக்கும் ஊழல்களையும், கொள்ளைகளையும் தோலுரித்துக் காட்டும் எதிர்க்கட்சியினரை குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரை அடக்கி ஒடுக்குவதற்காக காவல் துறையை ஏவி விடுவது தொடர்கதையாக உள்ளது.

தன் மீதும், தன்னுடைய விடியா அரசின் மீதும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை திசை திருப்பவும், தமிழகம் முழுவதும் தங்கு தடையின்றி நடைபெறும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் புழக்கம் உள்ளிட்ட பல்வேறு சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து, அதனால் பாதிப்படைந்துள்ள மக்களின் கோபத்தை மடைமாற்றுவதற்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மீது பொய் வழக்கு புனையும் செயலை இந்த திமுக அரசு செய்து வருவது ஜனநாயகத்தை நசுக்கும் செயலாகும்.

கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எம்.ஆர்.விஜயபாஸ்கர், இந்த திமுக ஆட்சியின் அவலங்களை மக்களிடம் தோலுரித்துக்காட்டி வருகிறார். கழகம் அறிவிக்கும் பல்வேறு போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறார். மாவட்டக் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்த தடைவிதிக்கும் விடியா திமுக அரசை எதிர்த்து நீதிமன்றம் சென்று உத்தரவு பெற்று, கண்டன ஆர்ப்பாட்டங்களையும், கண்டனப் பொதுக்கூட்டங்களையும் நடத்தி வருகிறார். அப்படிப்பட்ட கழக செயல்வீரரின் கழகப் பணிகளை முடக்க வேண்டும் என்பதற்காக, சிவில் பிரச்சினை ஒன்றில் பொய் வழக்கு பதிவு செய்து, அவர் தலைமறைவாக இருக்கிறார் என்று செய்திகளைப் பரப்பும், காவல் துறையை கையில் வைத்திருக்கும் ஸ்டாலின் செய்வது சர்வாதிகாரத்தின் உச்சமாகும். இதுசம்பந்தமாக சில நாட்களுக்கு முன்னரே எனது பேட்டியின் மூலம் திமுக அரசின் முதலமைச்சரை கண்டித்திருந்தேன். இதே நிலை எதிர்காலத்தில் திமுக அரசின் அமைச்சர்களுக்கும் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

சட்ட விரோத பணப் பரிமாற்ற வழக்கில் கைதாகி சிறைப் பறவையாக இருக்கும், முதலமைச்சரின் அபிமானத்திற்குரிய முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜியின் சகோதரர் அசோக்குமார் கடந்த ஓராண்டுக்கும் மேலாக தலைமறைவாக உள்ளார். பல நூறு கோடிகளை சட்டவிரோதமாக பணப் பரிமாற்றம் செய்ததில் அசோக்குமாருக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி அமலாக்கத் துறை விசாரணைக்கு சம்மன் அனுப்பியது. விசாரணைக்கு ஆஜராகாமல் ஆட்டம் காட்டி வரும் அசோக்குமார், அடிக்கடி இரவு நேரங்களில் சென்னை மற்றும் கரூரில் உள்ள வீடுகளுக்கு ரகசியமாக வந்து செல்வதாகவும், அவரை கண்காணித்து பிடித்துத் தரும்படி அமலாக்கத் துறை தமிழக டிஜிபிக்கு கடிதம் எழுதி உள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

எம்.ஆர்.விஜயபாஸ்கர் கொலைக் குற்றவாளிபோல் சித்தரித்து, தேடப்படும் குற்றவாளியைப்போல் நூற்றுக்கும் மேற்பட்ட காவல் துறையினர் தேடுவதும், அவருடைய உறவினர்கள் மற்றும் கழக நிர்வாகிகளை விசாரணை என்ற பெயரில் சிரமப்படுத்துவதுமாக உள்ள விடியா திமுக அரசின் முதலமைச்சரின் ஏவல்துறை, அமலாக்கத் துறையால் ஓராண்டுக்கும் மேலாக உண்மையிலேயே தேடப்பட்டு வருபவரை, அமலாக்கத் துறையே அவரது நடமாட்டத்தை விடியா திமுக அரசின் காவல் துறைக்கு தெரிவித்தும், பதுங்கி இருக்கும் தன் கட்சிக்காரர் அசோக்குமாரை கைது செய்து மத்திய அமலாக்கத் துறை வசம் ஒப்படைக்காமல் இரட்டை வேடம் போடுவது கடும் கண்டனத்திற்குரியது. இரட்டை வேடம் போடும் விடியா திமுக அரசு, மக்கள் பிரச்சினைக்காக போராடுபவர்களை சிறையில் அடைத்து முடக்கலாம் என்று தனது கோர முகத்தைக் காட்டுவதை அனைவரும் நன்கு அறிந்துள்ளனர்.

இந்த வழக்கிற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகளுடைய வீடுகளில் சோதனை நடத்துவது; அவர்களை மிரட்டுவது போன்ற செயல்கள் சர்வாதிகாரத்தின் உச்சமாகும். இது, மேலும் தொடர்ந்தால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிகப் பெரிய அறப்போராட்டம் நடத்தப்படும் என்று எச்சரிக்கிறேன். தன் கையில் உள்ள அதிகாரம் நிரந்தரமானது என்று பொம்மை முதலமைச்சர் நினைப்பது அவரது அறியாமையைக் காட்டுகிறது.

"அழிவை நோக்கி வேகமாக செல்பவன், தன்னிடம் உள்ள அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவான்; அந்த அதிகாரமே அவனுக்கு முடிவுரை எழுதும்"

என்று மேலை நாட்டு அறிஞர் ஒருவர் சொன்னதை, மமதையோடு செயல்பட்டு வரும் விடியா திமுக அரசின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு எச்சரிக்கையாக தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடகா அரசு மறுப்பு

## சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்வோம்: தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, 13 ஜூலை 2024: காவிரி ஒழுங்காற்று குழு உத்தரவின்படி, தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடகம் கைவிரித்து விட்டது. இதனையடுத்து காவிரி விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்வோம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழகம் கர்நாடகம் இடையே காவிரி நீரை பங்கிட்டு கொள்வதில் பல ஆண்டுகளாக பிரச்சினை நீடித்து வருகிறது.

காவிரி விவகாரத்தில் தீர்வு காண்பதற்காக காவிரி ஒழுங்காற்று குழு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த இரு குழுக்களும் அவ்வப்போது கூடி காவிரி நீரை பகிர்ந்தளிப்பது பற்றி ஆலோசித்து உத்தரவிட்டு வருகிறது. இந்த நிலையில் காவிரி ஒழுங்காற்று குழுவின் 99வது கூட்டம் டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் தமிழகத்திற்கு தினமும் ஒரு டி.எம்.சி காவிரி நீரை 20 நாட்களுக்கு திறக்கும்படி காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு ஒழுங்காற்று குழு பரிந்துரை செய்துள்ளது.

இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து விவாதிக்க முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் பெங்களூருவில் நேற்று நடைபெற்றது.

இதில் துணை முதலதைச்சர் டி.கே.சிவக்குமார் மற்றும் உயர் அதிகாரிகள், மூத்த வக்கீல்கள், சட்ட நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க காவிரி ஒழுங்காற்று குழு பரிந்துரைத்து இருப்பது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த கூட்டத்திற்கு பிறகு முதலமைச்சர் சித்தராமையா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கர்நாடகத்தில் இந்த முறை இயல்பான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. ஆனால் இதுவரை அணைகளில் 28 சதவீதம் அளவுக்கு நீர் இருப்பு பற்றாக்குறையாக உள்ளது. இதுகுறித்து காவிரி ஒழுங்காற்று குழு கூட்டத்தில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம். அதனால் இந்த மாத இறுதி வரை எந்த உத்தரவும் பிறப்பிக்க வேண்டாம் என்று கூறினோம். ஆனாலும் அந்த குழு, தினமும் ஒரு டி.எம்.சி. நீர் தமிழகத்திற்கு திறக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

தற்போது காவிரி அணைகளில் 60 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. இது எங்களுடைய விவசாய பணிகளுக்கு தேவைப்படுகிறது. அதனால் இந்த மாத இறுதி வரை தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க முடியாது. அதே நேரத்தில் கடந்த 3 நாட்களாக கபினி அணையில் இருந்து தமிழகத்திற்கு நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்த உத்தரவை எதி□□த்து காவிரி மேலாண்மை ஆணையத்தில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ளோம். மேலும் தமிழகத்திற்கு காவிரி நீர் திறப்பது குறித்து ஆலோசிக்க நாளை (ஞாயிற்றுக்கிழமை) அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டுவது என்று தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கர்நாடக அரசின் இந்த முடிவு தமிழக விவசாயிகள் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் காவிரிநீர் விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு என்ன? என்பது குறித்து தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:-

காவிரியில் தினமும் ஒரு டி.எம்.சி. நீர் இந்த மாதம் (ஜூலை) இறுதி வரை வழங்க வேண்டும் என்று கர்நாடகாவிற்கு காவிரி நீர் ஒழுங்காற்று குழு உத்தரவிட்டுள்ளது.

இந்த ஒழுங்காற்று குழு என்பது தமிழ்நாடு குழு அல்ல. தமிழகம், கர்நாடகம் என 2 மாநிலத்திற்கும் பொதுவான குழு. இது சுப்ரீம் கோர்ட்டால் அமைக்கப்பட்ட குழு.

இந்த குழு கர்நாடக அணைகளில் உள்ள மொத்த நீர் இருப்பை கணக்கெடுத்து கர்நாடகத்தின் தேவைக்கு போக தமிழ்நாட்டுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு டி.எம்.சி. வீதம் தண்ணீர் வழங்க உத்தரவிட்டு உள்ளது. இந்த உத்தரவை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கர்நாடக அரசு சொல்வது சிறுபிள்ளைகள் விளையாடுகிறபோது அழுகுணி ஆட்டம் ஆடுவதுபோல் இருக்கிறது. இதே ஒழுங்காற்று குழு தமிழ்நாட்டுக்கு கூட பாதகமாக பலமுறை கருத்து சொல்லி இருக்கிறது.

சுப்ரீம் கோர்ட்டால் உருவாக்கப்பட்ட ஒழுங்காற்று குழுவின் உத்தரவை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று சொல்வது சுப்ரீம் கோர்ட்டின் ஆணையை எதிர்த்து சொல்வது போன்றதாகும். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு எதிர்ப்பு சொல்வது அரசியல் சட்டத்தை மீறும் செயலாகும். சுப்ரீம் கோர்ட் கர்நாடகத்திற்கு மட்டும் சொந்தமானது அல்ல. இந்திய முழுமைக்கும் பொதுவானது.

தமிழ்நாட்டுக்கும், சுப்ரீம் கோர்ட் செல்வதற்கு வழி தெரியும். இந்த விவகாரத்தில் பிரச்சினை எழாமல் இருக்க ஒழுங்காற்று குழுவின் உத்தரவை ஏற்று நடைமுறைப்படுத்துவதுதான் அண்டை மாநிலங்களுக்கு இடையே நட்புறவை பலப்படுத்துவதாக இருக்கும். இது தெரியாதவரல்ல கர்நாடக முதலமைச்சர். அதுபோலவே நீர்வளத்துறை அமைச்சர் டி.கே.சிவக்குமாருக்கும் இது நன்றாக தெரியும். இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டம்: 15ந் தேதி திருவள்ளூர் கீழச்சேரி கிராமத்தில் முதல்வர் ஸ்டாலின் துவக்குகிறார்



சென்னை, 13 ஜூலை 2024: முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இந்த ஆண்டின் கல்வி வளர்ச்சி நாளில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் தொடங்கி வைக்கப்படுகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.9.2022 அன்று தொடங்கிவைக்கப்பட்டு, 1,545 பள்ளிகளைச் சேர்ந்த 1 லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர்.

இத்திட்டத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வரவேற்பினையும், மாணவ மாணவியர் இடையே ஏற்பட்ட எழுச்சியினையும் கருத்தில் கொண்டு 25.8.2023 அன்று கருணாநிதி பிறந்த ஊராகிய திருக்குவளையில் முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்டு, 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் காலை உணவைச் சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வருகிறார்கள்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், முதலமைச்சர் முக.ஸ்டாலின், நாளை (15 ந் தேதி) காமராஜர் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் சார்பில் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் மூலம் உள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 குழந்தைகள் பயனடைவார்கள்.

முதலமைச்சரால் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உலகிற்கே முன்னோடியான திட்டமாகத் திகழ்கிறது.

இந்த விழாவில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட நிர்வாகம் இவ்விழாவிற்கான முன்னேற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

# தமிழ்நாட்டின் திருநெல்வேலி நகரில் பகிரப்படும் மின் - வாகன போக்குவரத்து சேவையைத் தொடங்கும் யூலு






திருநெல்வேலி, 13 ஜூலை 2024: பகிரப்படும் மின்சார வாகன போக்குவரத்து தொழில்நுட்ப துறையில் இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனமான யூலு, தமிழ்நாட்டின் திருநெல்வேலி நகரில், இந்நகரத்தைச் சேர்ந்த ரூனா மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து தனது சேவையை இன்று தொடங்கியிருக்கிறது. கே பி காமேஸ்வரன், காவல் உதவி ஆணையர் - போக்குவரத்து, திருநெல்வேலி மாவட்டம், மற்றும் ஸ்டார்ட்அப் தமிழ்நாடு திட்டத் தலைவர்களான திரு. என் ராகுல் மற்றும் திரு சி ஜிகின் துரை ஆகியோர் முன்னிலையில் இந்த சேவை தொடங்கப்பட்டது. இந்த அறிமுகத்தை தொடர்ந்து, தொழில்முனைவோரான திரு வி. நாகராஜன் தலைமையில் இயங்கும் ரூனா மோட்டார்ஸ், யூலுவின் ஆதரவுடன் திருநெல்வேலி நகரம் முழுவதிலும் டெக்ஸ் ஜி ஆர் ஈவி. யூலு பிசினஸ் பார்ட்னர்ஷிப் செயல்படும் மூன்றாவது அமைவிடமாக இப்போது திருநெல்வேலி நகரம் இடம்பெற்றிருக்கிறது. இதற்கு முன்னதாக, இந்தூர் மற்றும் கொச்சியில் அந்நகரங்களில் உள்ள ஓய் பி பி பார்ட்னர்களுடன் இணைந்து, தனது லெஷர் மொபிலிட்டி சேவைகளை யூலு அறிமுகம் செய்திருந்தது. புகை மற்றும் மாசு உமிழ்வு இல்லாத மின்சார வாகனங்களை திருநெல்வேலி நகரில் அறிமுகம் செய்திருப்பது, பெருநகரங்கள் அல்லாத நடுத்தர நகரங்களிலும் தனது சேவையை வேகமாக உயர்த்தி வரும் யூலு நிறுவனத்தின் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. திருநெல்வேலி நகரமானது, சிமெண்ட், பருத்தி, சர்க்கரை மற்றும் மருந்து தயாரிப்பு தொழில்களுக்கு புகழ் பெற்ற பகுதியாகும். அருகிலுள்ள நகரங்கள், கிராமங்கள் மட்டுமின்றி, பிற மாநிலங்களிலுமிருந்தும் ஏராளமான மாணவர்கள், மருத்துவ சுற்றுலாப் பயணிகள் மற்றும் வேலை தேடுபவர்களை வெகுவாக ஈர்க்கும் நகரமாகவும் இது திகழ்கிறது. சுற்றுச்சூழல் ரீதியில் நிலைப்புத்தன்மையுள்ள மற்றும் மலிவான கட்டணத்தில் கிடைக்கும் போக்குவரத்திற்கான தேவையை உணர்ந்த ரூனா மோட்டார்ஸின் நிறுவனர் திரு. வி. நாகராஜன் - திருநெல்வேலியை ஒரு நவீனமான, ஸ்மார்ட்டான மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள நகரமாக மாற்றுவதற்கு யூலு நிறுவனத்துடன் கைகோர்க்க முடிவு செய்தார்.

தொடக்கத்தில் உணவு விநியோக பார்ட்னர்களுக்கு ரூனா மோட்டார்ஸ் மற்றும் யூலு நிறுவனங்கள் ஹைப்பர்லோகல் டெலிவரிக்கான மின்சார வாகனங்களை வழங்கும். மின்சார வாகனங்கள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியை வழங்குவதோடு, பிராண்டு கூட்டாண்மைகள் விஷயத்திலும் ரூனா மோட்டார்ஸ்க்கு யூலு ஆதரவளித்திருக்கிறது. புதிய வாகன ஓட்டுனர்களை ரூனா மோட்டார்ஸ் இணைத்துக்கொள்ள உதவ ஸ்விகி மற்றும் ஜொமோட்டோவின் - ன் இந்நகர அடிப்படையிலான குழுக்களுடனும் யூலு நெருக்கமாக பணியாற்றி வருகிறது. 30-40% அளவிற்கு அதிக சேமிப்பு யூலு - ன் வாகனங்கள் மூலம் கிடைக்கும் என்பதால், இக்கூட்டாண்மை, பல ஜிக் பணி வாய்ப்புகளை உருவாக்கும். திருநெல்வேலியின் உள்ளூர் பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும். மேலும், டெலிவரி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் வணிக நிறுவனங்கள் அவைகளின் லாஜிஸ்டிக்ஸ் தேவைகளுக்கு சுற்றுச்சூழலுக்கு தோழமையான வாகனங்களுக்கு எளிதாக மாறுவதை ஏதுவாக்கும். யூலு - ன் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. அமீத் குப்தா பேசுகையில், "திரு. வி. நாகராஜன் தலைமையிலான ரூனா மோட்டார்ஸ் - ன் கூட்டாண்மையோடு திருநெல்வேலியில் எங்களது மின்சார வாகன போக்குவரத்து சேவைகளை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒத்துழைப்பு, ஒய் பி பி முன்முயற்சியின் மற்றொரு மைல்கல்லைக் குறிப்பது மட்டுமல்லாமல், மின்சார வாகன புரட்சியை நாட்டின் ஒவ்வொரு பெருநகரத்திற்கும் மற்றும் நகரங்களுக்கும் கொண்டு செல்வதற்கான யூலுவின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. யூலுவின் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் இயக்கப்படும் ரூனாவின் வாகனங்கள் திருநெல்வேலியில் ஹைப்பர்லோகல் டெலிவரிகளில் புரட்சியை ஏற்படுத்தும்; மேலும், இந்த அழகான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் நகரத்திற்கான நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சிக்கு வழிவகுக்கும்," என்று நான் நம்புகிறேன். ரூனா மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனர் திரு. வி. நாகராஜன் பஜாஜ் ஆட்டோவால் தயாரிக்கப்படும் உலகத் தரம் வாய்ந்த மின்சார வாகனங்கள் 'மேட் இன் இந்தியா" என்ற பிராண்டை கொண்டிருப்பதால், யூலு உடன் இணைந்து செயல்படுவதற்கான தனது முடிவு எளிதாக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், "யூலுவின் நிரூபிக்கப்பட்ட முழுமையான மின்வாகன போக்குவரத்துத் தீர்வு மற்றும் ரூனாவின் உள்ளூர் நிபுணத்துவம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு திருநெல்வேலியில் போக்குவரத்து செயல்தளத்தையே மாற்றியமைக்கும். இந்த மலிவான, சுற்றுச்சூழல் தோழமையுள்ள ஹைப்பர்லோகல் டெலிவரிக்கான மின்வாகன சேவையை இந்நகர மக்கள் சிறப்பாக வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன். இச்சமூகத்தின் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வுக்கும் இதன்மூலம் நாங்கள் பங்களிப்பை வழங்குகிறோம். தனிநபர் போக்குவரத்து போன்ற பிற பகுதிகளுக்கும் மற்றும் முடிந்தவரை வேறுபிற நகரங்களுக்கும் எங்கள் செயல்பாட்டை விரிவாக்கம் செய்வதை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்." என்று கூறினார். தியாகராஜநகர், சம்பந்தர் தெரு, மேகலிங்கபுரம் சாலைத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி சந்திப்பு மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி உள்ளிட்ட நகரின் முக்கிய இடங்களில் ரூனா மோட்டார்ஸ் மின் வாகனங்களை நிறுத்தியுள்ளது. திருஞானசம்பந்தர் கோவில் டவுன், மேதாப்ளாக் புஷ்பலதா மற்றும் உடையார்பட்டிசாலை சந்திப்பு ஆகிய இடங்களில் உள்ள முன்னணி பேட்டரி-எ-சர்வீஸ் நிறுவனமான யூமாவால் இயக்கப்படும் மூன்று பேட்டரி மாற்று நிலையங்கள் மூலம் மின்வாகனங்களது ஃப்ளீட்டின் ஆற்றல் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். கூடுதலாக, வாடிக்கையாளர் தகவல், வாகன வாடகை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான தொடுமுனைகளாக செயல்படுவதற்காக இந்த மூன்று மையங்களும் யூலு நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளன.

# பார்த்திபன் தயாரித்து இயக்கி நடிக்கும் டீன்ஸ். 13 சிறுவர்களின் நடிப்பு சூப்பர்




சென்னை, 13 ஜூலை 2024: பார்த்திபன் தயாரித்து இயக்கி நடித்த டீன்ஸ் படம் வெளியாகி சக்கை போடு போடுகிறது. பார்த்திபன் படத்தை ரசிகர்கள் பாராட்ட ஆரம்பித்து விட்டனர். குறைந்த பட்ஜெட்டில் புதிய முயற்சியை பார்த்திபன் எடுத்து பாராட்டுக்களை அள்ளி வருகிறார்.

புதிய பாதை படத்தை போல 30 வருடங்கள் கழித்து பார்த்திபனின் சூப்பர் படம் டீண்ஸ். டீண்ஸ் படத்தை வந்து பாருங்க புடிக்கும் என்றும் பார்த்திபன் சொன்ன நிலையில், பார்த்திபன் படத்தை பார்த்த ரசிகர்களுக்கு இவ்வளவு குறைவான பட்ஜெட்டில் செய்யப்படும் புதிய முயற்சி கூட பெரிய பட்ஜெட் படங்களில் செய்யாமல் விடுவது ஏன் என்கிற கேள்வி எழத்தான் செய்கிறது.

13 விடலைப் பருவ சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் ஒரு ஊருக்குச் செல்ல அங்கே நடக்கும் அமானுஷ்யத்தால் அடுத்தடுத்து காணாமல் போகின்றனர். இது பேய்க் கதையா? அல்லது அறிவியல் கதையா? என்கிற ட்விஸ்ட்டுடன் உருவாகியுள்ள இந்த படம் குறித்த விமர்சனத்தை இங்கே பார்க்கலாம் வாங்க..

டீன்ஸ் கதை: ஜென் தலைமுறையை சேர்ந்த 13 வயதை நிரம்பிய சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் வெளிநாட்டில் இந்த வயது குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் உரிமைகளை தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றும் தாங்கள் அனைவரும் பெரியவர்கள் என்பதை நிரூபிக்க துடிக்கின்றனர்.

அதற்காக பள்ளியை ஒரு நாள் கட் செய்து விட்டு, ஒரு பெண்ணின் பாட்டி ஊரில் பேய் இருப்பதாக கேட்கும் கதையை நம்பி, அங்கே சென்று அந்த பேய் என்ன தான் செய்கிறது என பார்த்து விடுவோம் என கிளம்புகின்றனர். பேயை தேடிச் செல்லும் சிறுவர்கள் ஒருவர் பின் ஒருவராக மாயமாக மறைய அவர்களை காப்பாற்ற வரும் பார்த்திபன் இதற்கு விடை கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பது தான் இந்த டீன்ஸ் கதை.

பார்த்திபனின் புதிய பாதை: எப்போதுமே பார்த்திபன் வித்தியாசமான முயற்சிகளை சினிமாவில் எடுத்து மிகப்பெரிய வெற்றியும் பெற்று விடுகிறார். விமர்சகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று விடுகின்றன. ஒத்த செருப்பு சைஸ் 7 படத்தில் ஒரே ஆளாக படம் முழுவதும் நடித்து மிரட்டிய பார்த்திபன் இரவின் நிழல் படத்தில் சிங்கிள் ஷாட் படமாக எடுத்துக் காட்டி அசத்தியிருந்தார்.

ஆவியா? அறிவியலா?: முதல் பாதி முழுவதும் அமானுஷ்யமாக செல்லும் படம் 2ம் பாதியில் யாரும் எதிர்பார்க்காத கதைக்களத்திற்கு நகர்வதில் தான் பார்த்திபனின் புத்திசாலித்தனம் வெளிப்படுகிறது. அதை 2ம் பாதியில் சிறப்பாகவே செய்திருக்கிறார். முதல் பாதியில் அந்த சஸ்பென்ஸை மெயின்டெயின் பண்ண வேண்டும் என அவர் நினைத்து கொண்டு சென்றுள்ளார், பார்த்திபனின் கதை தேர்வு மற்றும் புதிய கோணத்தில் ஒரு விஷயத்தை அணுகுவது, இந்த படம் கமர்ஷியில் ஹிட். அரைச்ச மாவையே அரைக்க வேண்டாம் என நினைப்பது என அனைத்துமே இந்த படத்துக்கு பிளஸ் தான். டி. இமான் இசை மற்றும் கவுமிக் ஆரி ஒளிப்பதிவு பல இடங்களில் கை கொடுத்திருக்கிறது. சிறுவர்களாக நடித்த அந்த 13 பேரின் நடிப்பு தான் இந்த படத்திற்கு உண்மையான பலம். அவர்கள் பேசும் வசனங்கள், யதார்த்தமான நடிப்பு என அனைத்துமே படத்தை உட்கார்ந்து பார்க்க வைக்கிறது. யோகி பாபு கதாபாத்திரம் மிக அருமை. இந்த படத்தை தியேட்டரில் ஒரு முறை பார்த்தே ஆக வேண்டும் என்கிற அளவுக்கு படத்தில் ஒரு சூப்பரான மேட்டர் உள்ளது.

## பகல் வேஷப் பரப்புரையை மக்கள் மதிக்கவே இல்லை: வீணர்களை மக்கள் விரட்டி அடித்தார்கள்
## விக்கிரவாண்டி மக்களுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் நன்றி இந்தியா கூட்டணி வெற்றி குறித்து பெருமிதம்



சென்னை, 13 ஜூலை 2024: இந்தியா கூட்டணியின் வெற்றி தொடர்கிறது, விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. மகத்தான - மாபெரும் வெற்றியை வழங்கிய விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் நாற்பது தொகுதியிலும் நாற்பதுக்கு நாற்பது என்ற நூறு விழுக்காடு வெற்றியை தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி பெற்றது. சாதாரண வெற்றியல்ல, பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றியைப் பெற்றோம். அ.தி.மு.க. கூட்டணி படுதோல்வி அடைந்தது. பா.ஜ.க கூட்டணி, பாதாளத்தில் விழுந்தது.

இதைத் தொடர்ந்து, விக்கிரவாண்டி இடைத்தேர்தலை எதிர்கொண்டோம். நாடாளுமன்றத் தேர்தல் படுதோல்வியில் எழ முடியாமல் இருந்த அ.தி.மு.க, விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் அதே படுதோல்வியைச் சந்திக்கத்தான் போகிறோம் என்பதை உணர்ந்து போட்டியில் இருந்து பின்வாங்கியது. பா.ஜ.க, தனது அணியில் இருக்கும் பா.ம.க.வை நிறுத்தியது. 'இடைத்தேர்தலிலேயே நிற்பது இல்லை' என்று வைராக்கியமாக இருந்த பா.ம.க. விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிட முன் வந்த மர்மம் இன்னமும் விலகவில்லை.

தோற்கப் போகிறோம் என்று தெரிந்தே போட்டியிட்டது பா.ஜ.க. அணி. அவதூறுகளையும், பொய்களையும் தி.மு.க மீதும் குறிப்பாக என் மீதும் விதைத்து, தங்களது 100 விழுக்காடு தோல்வியை மறைப்பதற்காக மிகக் கீழ்த்தரமான பரப்புரையை பா.ஜ.க. அணி செய்தது. பொய்வேஷக்காரரர்களின் பகல் வேஷப் பரப்புரையை, மக்கள் மதிக்கவே இல்லை. இந்த வீணர்களை விக்கிரவாண்டி மக்கள் விரட்டியடித்து விட்டார்கள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகமே என்றும் எப்போதும் தேவை என்பதை இந்த இடைத்தேர்தலின் மூலமாக எடைபோட்டுச் சொன்ன விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் காலம் பார்க்காமல் உழைத்த உழைப்புக்கும், தினந்தோறும் உருவாக்கிக் கொடுத்த திட்டங்களுக்கும் மக்கள் தெரிவித்த நன்றியின் அடையாளமாகவே இந்த வெற்றியை நான் பார்க்கிறேன்.

இதே நேரத்தில் இந்தியா முழுமைக்கும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகள் 11 இடங்களில் முன்னணியில் இருக்கிறது. பா.ஜ.க தோல்வியைத் தழுவி இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெறாத கட்சி தான் பா.ஜ.க. இறங்கி வந்து சில கட்சிகளின் தயவால் ஒன்றியத்தில் ஆட்சி அமைத்துள்ளது. பா.ஜ.க. அத்தகைய தோல்வி முகமே பா.ஜ.க-வுக்கு இந்த இடைத்தேர்தலிலும் தொடர்கிறது. தோல்விகளில் இருந்து பா.ஜ.க பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். மாநில உணர்வுகளை மதிக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்த முடியாது என்பதை பா.ஜ.க. இனியாவது உணர வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2019ம் ஆண்டு முதல் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணியின் வெற்றி தொடர்கிறது.

தி.மு.க கழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வெற்றியாக விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றியும் அமைந்துள்ளது. இந்த வெற்றியானது எங்களுக்கு மாபெரும் உற்சாகத்தையும், எழுச்சியையும், அதேசமயத்தில் கூடுதல் பொறுப்பையும் கொடுத்திருக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 7 மாநிலங்களில் 13 தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தல்
## 11 சட்டமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி முன்னிலை



சென்னை, 13 ஜூலை 2024: நாடு முழுவதும் 7 மாநிலங்களின் 13 சட்டமன்ற தொகுதிளுக்கு நடந்த இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை முதல் எண்ணப்பட்டு வருகிறது. இதில் இந்திய கூட்டணி வேட்பாளர்கள் 11 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளனர்.

பிகார், மேற்குவங்கம், தமிழகம், மத்திய பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் 13 சட்டமன்ற தொகுதிகளில் கடந்த ஜூலை 10ம் தேதி இடைத்தேர்தல் நடந்தது. இதில், மேற்குவங்கம், உத்தராகண்ட், பிகாரின் சில இடங்களைத் தவிர அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்தது. தேர்தல் ஆணையத்தின் தகவல் படி தமிழகத்தின் விக்கிரவாண்டியில் அதிக அளவிலும், உத்தராகண்டின் பத்ரிநாத்தில் குறைந்த அளவிலும் வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில் பதிவான வாக்குகள் இன்று காலை முதல் எண்ணப்பட்டு வருகின்றன.

மேற்கு வங்க மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற 4 சட்டமன்ற தொகுதிகளிலும் மாநிலத்தின் ஆளுங்கட்சியான திரிணமூல் காங்கிரஸ் வேட்பாளர்கள் முன்னிலை பெற்றுள்ளனர். ராய்கஞ்ச் தொகுதியில் டிஎம்சி வேட்பாளர் கிருஷ்ண கல்யாண் முன்னிலையில் உள்ளார். அதேபோல், ரானாகட் தக்ஷினில் டிஎம்சி வேட்பாளர் முகுத் மணி அதிகாரி, பாக்தாவில் போட்டியிட்ட மதுபர்னா தாகுர், மணிக்தாலாவில் போட்டியிட்ட சுப்தி பாண்டே ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலத்தின் பத்ரிநாத் சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் லகபத் சிங் புடோலா முன்னிலையில் உள்ளார். மங்களூரு தொகுதியில் காசி முகம்மது நிஜாமுதீன் முன்னிலை வகிக்கிறார்.

தமிழகத்தின் விக்கிரவாண்டியில் நடந்த இடைத்தேர்தலில் மாநிலத்தின் ஆளுங்கட்சியான தி.மு.க.வின் அன்னியூர் சிவா முன்னிலையில் உள்ளார்.

பஞ்சாப் மாநிலம் மேற்கு ஜலந்தர் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் மொகிந்தர் பாகத் முன்னிலையில் உள்ளார்.

இமாச்சலப் பிரதேசத்தின் தேக்ரா தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரும் மாநில முதலமைச்சர் சுகுவின் மனைவியுமான கமலேஷ் தாகுர் முன்னிலை வகிக்கிறார், அதேபோல் மற்றொரு தொகுதியான நலகரில் காங்கிரஸ் வேட்பாளர் ஹர்தீப் சிங் பாவா முன்னிலையில் உள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் அமர்வாரா தொகுயில் காங்கிரஸ் கட்சியின் தீரன் ஷா சுகாராம் தாஸ் இன்வாடி முன்னிலை வகிக்கிறார். ஆனால், பாஜக வேட்பாளர் கமலேஷ் பிரதாப் ஷாவை விட வாக்கு வித்தியாசம் மிகவும் குறைவாக இருப்பதால் அங்கு எப்போது வேண்டுமானாலும் முன்னிலை நிலவரம் மாறலாம்.

பீகார் மாநிலத்தின் ருபாலி தொகுதியில ஐக்கிய ஜனதா தளம் கட்சி வேட்பாளர் கலந்தர் பிரசாத் மண்டல் 6,588 வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

இவ்வாறாக இந்தியா கூட்டணி 11 தொகுதிகளிலும், பா.ஜ.க. கூட்டணி 2 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது. மத்திய பிரதேசத்தில் அமர்வாரா தொகுதியில் பா.ஜ.க.வும், பீகாரில் ரூபாலியில் ஐக்கிய ஜனதா தளமும் முன்னிலையில் உள்ளன.

## ஒரு ஆண்டு நிறைவை கொண்டாடும் வடபழனி - காவேரி மருத்துவமனை
## 365 நாட்களும் அர்ப்பணிப்புடன் இயங்கும் "ஃபேமிலி கிளினிக்" - ஐ தொடங்குகிறது

சென்னை, 13 ஜூலை 2024: சென்னை வடபழனியில் உள்ள காவேரி மருத்துவமனை அதன் ஓராண்டு ஆண்டுவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறது. சேவையில் கிடைக்கும் மகிழ்ச்சியை சமுதாயத்துடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் குடும்பங்களுக்கு மிதமான கட்டணங்களில் முழுமையான சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் "ஃபேமிலி கிளினிக்" என்பதனை காவேரி மருத்துவமனை இந்த ஆண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக தொடங்கியிருக்கிறது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்து வயது பிரிவினருக்கும் மற்றும் சமுதாயத்தின் பல்வேறு பின்புலங்களைச் சேர்ந்த அனைவருக்கும் உயர்தர மருத்துவ சேவையை வழங்க வேண்டுமென்ற இம்மருத்துவமனையின் பொறுப்புறுதிக்கு இந்நிகழ்வு நேர்த்தியான சான்றாக இருக்கிறது. தொடங்கப்பட்டிருக்கும் இந்த புதிய ஃபேமிலி கிளினிக், சமுதாயத்திற்கு எண்ணற்ற பலன்களை வழங்கும். சிறார்கள் முதல், முதியவர்கள் வரை அனைத்து வயது பிரிவுகளையும் சேர்ந்தவர்களுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் விரிவான சிகிச்சைகளை இது அளிக்கிறது. குறித்த கால அளவுகளில் உடல் நலப் பரிசோதனைகள், தடுப்பூசி மருந்துகள் மற்றும் நோயறிதலுக்கான ஸ்க்ரீனிங் சோதனைகள் போன்ற முன்தடுப்பு சுகாதார சேவைகள், நோய்கள் வராமல் தடுப்பதற்கும் மற்றும் ஆரம்ப நிலையிலேயே பாதிப்பு நிலைகளை கண்டறிவதற்கும் முதன்மையான வழிமுறைகளாக இங்கு இருக்கும்.

மேலும் நீரிழிவு, மிகை இரத்தஅழுத்தம் மற்றும் ஆஸ்துமா போன்ற நாட்பட்ட, தீவிர நிலைகளுக்கு நிபுணத்துவ மேலாண்மை சேவையையும் தந்து உகந்த உடல்நல விளைவுகள் கிடைக்கப்பெறுவதை ஊக்குவிக்கும். காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை செயல்படும் இந்த ஃபேமிலி கிளினிக், ரூ.200 என்ற மிகக்குறைவான கட்டணத்தில் மருத்துவ நிபுணர்களுடன் கலந்தாலோசனையை வழங்கும். டாக்டர். சுஜாதா, கிளினிக்கல் லீட் - குடும்ப மருத்துவம், டாக்டர். வைபவ் சுரேஷ், இணை மருத்துவர் - குடும்ப மருத்துவம் ஆகியோரை உள்ளடக்கிய சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய எமது குழு, குடும்பத்திலுள்ள அனைத்து வயது பிரிவிலும் உள்ள நோயாளிகளுக்கு தனிப்பட்ட சிகிச்சையையும், பராமரிப்பையும்




வழங்கும். குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அவரவருக்குத் தேவைப்படுகின்ற கவனிப்பையும், சிகிச்சையையும் பெறுவதை உறுதி செய்வது மீது அனுபவம் மிக்க இம்மருத்துவ நிபுணர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர். தேவைப்படுமானால், குடும்ப மருத்துவரால் பரிந்துரைக்கப்படும்போது, கூடுதல் கட்டணங்களின்றி சிறப்பு நிபுணர் / சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் நிபுணரை சந்தித்து, மருத்துவ ஆலோசனையை பெறமுடியும். இந்த குடும்ப மருத்துவமனையில் சௌகரியமான சிகிச்சைக்கு அணுகுவசதியை உறுதிசெய்வது ஒரு முக்கிய முன்னுரிமையாக இருக்கிறது.

காலை 8:00 மணி முதல், இரவு 8:00 மணி வரை தொடர்ச்சியாக இந்த கிளினிக் இயங்குவதால், பணியாற்றுபவர்கள், மாணவர்கள் உட்பட, தங்களுக்கு நேரம் கிடைக்கும்போது இந்த மருத்துவ சேவைகளைப் பெற முடியும். அதற்கும் மேலாக, வெறுமனே ரூ.200 என்ற எளிய கட்டணத்தில் மருத்துவ நிபுணர்களின் சிறந்த ஆலோசனையையும், சிகிச்சையையும் இதில் பெற முடியும் என்பதால், அனைவருக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை இதில் சாத்தியமாகும்.

காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் செயலாக்க இயக்குனர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் பேசுகையில், "அனைத்து மக்களும் அதிகம் மதிக்கின்ற மற்றும் பெரிதும் நம்புகின்ற சுகாதார சேவை வழங்குனராக உருவெடுக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள். இம்மருத்துவமனை தொடங்கி ஓராண்டு நிறைவடையும் இத்தருணத்தில், குடும்ப கிளினிக்கை அறிமுகம் செய்திருப்பதன் மூலம் சமுதாயத்திற்கான எமது சேவை அர்ப்பணிப்பை மீண்டும் நாங்கள் உறுதி செய்கிறோம்; ஏழை எளிய மக்களும் உயர்தர மருத்துவ சிகிச்சையை பெறுவதற்கான வாய்ப்பை நிஜமாக்க வேண்டுமென்ற எமது செயல்திட்டத்திற்கு இதுவொரு நல்ல எடுத்துக்காட்டு. வடபழனி பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் குடும்பங்கள் அனைத்திற்கும் விரிவான மற்றும் சிறப்பான மருத்துவ சேவைகளை எளிய கட்டணத்தில் வழங்குவது என்ற எமது பொறுப்புறுதிக்கு இந்த கிளினிக் சான்றாக திகழ்கிறது." என்று கூறினார். நேர்த்தியான மருத்துவ சிகிச்சைக்கும் மற்றும் நோயாளிகளுக்கு கனிவான பராமரிப்பை வழங்குவதற்கும் உயர்தர நிலைகளை நிறுவியிருப்பதால், மக்களின் அதிக நம்பிக்கைக்குரிய மருத்துவ மையமாக வடபழனி காவேரி மருத்துவனை புகழ் பெற்றிருக்கிறது. நோயாளிகளின் நலவாழ்வை மேம்படுத்துவதற்கான காவேரி குழுமத்தின் பயணத்தில் இந்த ஃபேமிலி கிளினிக்கின் தொடக்கம் மற்றுமொரு முன்னேற்ற நடவடிக்கையாகும். நோய்கள் வராமல் தடுப்பதற்கும் மற்றும் ஆரம்ப நிலைகளிலேயே நோய் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிப்பதும் முன்தடுப்பு சுகாதார சேவைகளின் மைய அம்சங்கள் என்று நம்புகின்ற காவேரி மருத்துவமனை, அதற்கு முன்னுரிமை அளிக்கும். முன்தடுப்பு பராமரிப்பின் மீது சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் நாட்பட்ட நோய்கள் வரும் வாய்ப்புகளை குறைக்கவும் மற்றும் சமுதாய உறுப்பினர்களின் நீண்டகால உடல்நலத்தை மேம்படுத்தவும் இயலும் என்று இம்மருத்துவமனை நம்புகிறது.